# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 21.05.2010 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் சூரா அல் ஃபுர்கானின் 32 வது வசனத்தை ஓதினார்கள்:**

பொருள் : இவ்வாறு நாம் எல்லா நபிமார்களுக்கும், குற்றவாளிகளிலிருந்து பகைவர்களை உருவாக்கியுள்ளோம். நேர்வழி காட்டவும், உதவி செய்யவும் உமது இறைவனே போதுமானவன். (25:32)

நபிமார்கள் உலகில் வரும்போது சமுதாயம் எப்போதும் எதிர்க்கிறது. எள்ளிநகையாடுகிறது. நான் ஓதிய வசனத்தில் அல்லாஹ் இந்த விஷயத்தை குறிப்பிடுகிறான்.

நாம் ஒவ்வொரு நபிக்கும் குற்றவாளிகளிலிருந்து எதிரிகளை ஏற்படுத்தி இருந்தோம். உமது இறைவன் நேர்வழிகாட்டுவதற்கும் உதவி செய்வதற்கும் போதுமானவன்.

அல்லாஹ் கூறுகின்றான்: ஒவ்வொரு நபிக்கும் எதிர்ப்பு காட்டப்பட்டது. எதிர்ப்பவர்கள் இறை நெருக்கத்தைப் பெற்றவர்கள் அல்ல. மாறாக குற்றவாளிகள் ஆவர். இறைவனது பெயரால் இறைவனது அன்பிற்குரியவர்களுக்கு கஷ்டம் தரப்படுகிறது. குற்றவாளிகளின் விஷமம் அதிகமாகிக் கொண்டே செல்கிறது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை எதிர்க்கும் போதும் இறைவன் இது குற்றவாளிகளின் வேலை என்றுதான் கூறினான். மார்க்கத்தின் எதிரிகள் எப்போதும் நபிமார்களின் ஜமாஅத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து அவர்களின் பணியில் தடையை ஏற்படுத்த முயற்சி செய்கின்றனர். அவரை ஏற்றுக் கொண்டவர்களுக்கு தொல்லை தர விரும்புகின்னர். ஆனால் இந்த கஷ்டங்கள், தொல்லைகள் கொடுப்பதினால் எதிரிகளுக்கு வெற்றி ஒருபோதும் கிடைத்ததில்லை. இறுதியில் நபிமார்கள்தான் வெற்றி பெறுகின்றனர். எதிரிகள் இறைவனின் தண்டனைக்கு அடையாளமாகின்றனர்.

நான் ஓதிய வசனங்களில் இறைவன் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது எதிரிகள் என்னென்ன அநீதியிழைத்தார்கள் என்று கூறுகிறான்.

அன்னார் மீதும் அவர்களை ஏற்றுக் கொண்டவர்கள் மீதும் நடந்த ஒவ்வொரு அநீதியின் போதும் அவர்கள் பொறுமையை கடைபிடித்தார்கள். பொறுமை காட்ட அறிவுரை கூறினார்கள். வரலாற்றில் ஒரு வேதனைமிக்க சம்பவம் கூட உள்ளது.

ஹஸ்ரத் அம்மார் அவரது தந்தை யாஸிர் மற்றும் தாயார் ஸமியா ஆகியோர் மீது பெரும் அநீதியிழைக்கப்பட்டது; சித்ரவதை செய்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அந்த இடத்திற்கு வந்து மிகவும் வேதனை மிகுந்த குரலில் கூறினார்கள்.

யாஸிர் குடும்பத்தாரே! பொறுமை செய்யுங்கள். நிச்சயமாக உங்கள் பொறுமையின் காரணத்தால் உங்களுக்கு சொர்க்கம் தயார் செய்யப்பட்டுள்ளது. யாஸிர் ஷஹீதாகி விட்டார். வயதான சமியாவின் வயிற்றுக்கு கீழ் அபுஜஹ்ல் அம்பை எய்தான். துடிதுடித்தவாறு அங்கே அப்பெண் உயிரை விட்டார்கள்.

இந்த அநீதி தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொண்டவர்களுக்கும் நடைபெற்றது. இந்த அநீதிக்குப் பயந்து யாரும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பக்கத்தில் வராமல் போக வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்தார்கள். ஆனால் இந்த அநீதியால் நல்லியல்பு கொண்டோரின் கவனம் இங்கு திரும்பியது. ஈமானால் நிரப்பப்பட்ட உள்ளங்களைப் பார்த்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது இன்னும் அதிகமாக மக்களின் கவனம் திரும்பியது. இஸ்லாத்தின் தூதுச் செய்தி மக்காவில் இருந்து புறப்பட்டு மதீனாவையும் சென்றடைந்தது. அங்கு இஸ்லாம் பரவத் தொடங்கியது. அபிசினியாவில் இஸ்லாத்தின் தூதுச்செய்தி சென்று சேர்ந்தது. மக்காவின் தலைவர்கள் அநீதியை உச்சகட்டத்துக்கொண்டு சென்றனர்.

இஸ்லாத்தின் தூதுச்செய்தியை இந்த அநீதிகள் அமுக்குவதற்குப் பதில் பரவுவதற்கு தான் காரணமாக அமைந்தன.

ஆகவே இறைவன் கூறுகிறான். இந்த எதிர்ப்பு கண்டு பதற்றமடைய வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில் இந்த எதிர்ப்புதான் பலருக்கு ஹிதாயத் கிடைக்க காரணமாகிறது. மேலும் அல்லாஹ் ஹாதி (நேர்வழி காட்டுபவன்) மற்றும் நஸீர் (உதவி செய்பவன்) அவன் உங்களுக்கு உதவி செய்வான். எல்லா எதிர்ப்புகளுக்கும் இடையில் இறைவனால் நியமிக்கபட்டவருக்கே வெற்றி கிடைக்கும். அல்லாஹ் தனது நபிமார்களுக்கு உதவி செய்வதற்காக வானத்திலும் பூமியிலும் இருந்து அடையாளங்களை காட்டுகிறான். அதுவும் அவன் விரும்பும் போது காட்டுகிறான். குற்றவாளிகளின் அழிவுக்காக தனது விஸ்வரூபத்தையும் காட்டுகிறான். சிலவேளை அதிகாரம் படைத்த மன்னர்கள், பிர்அவ்ன்கள் பெரும் தலைவர்கள் கூட நபிமார்களின் பணிகளை தடுத்து நிறுத்திவிட முடிந்ததில்லை. மாறாக, எதிரிகள் முன்னேற்றத்துக்குதான் வழிகாட்டினர். ஹஸ்ரத் மஸீஹ் (அலை) கூறினார்கள்:

எவ்வாறு கழிவுப்பொருள்கள் பயிருக்கு உரமாக பயன்படுகின்றதோ அதேபோன்று இறை ஜமாத்துக்கு இந்த எதிரிகளும் பயன்படுகின்றனர். இந்த எதிர்ப்பும் பலரது ஹிதாயத்துக்கு காரணமாக அமைகின்றன. எனவே அல்லாஹ்வின் அன்பிற்குரியவர்கள் எதிர்ப்பது எப்போதும் குற்றவாளிகளின் வேலையாகும். ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் தமது வாதத்தை எடுத்து வைக்கும் போது இதே சுன்னத் தொடர வேண்டும் என்பது இறைநியதியாக இருந்தது என்பது வெளிப்படை. அவர்களுக்கு பெரும் எதிர்ப்பு ஏற்பட்டது. அவர்களை ஏற்றுக் கொண்டவர்களுக்கு அவ்வப்போது எதிர்ப்பு செலுத்தப்பட்டது. பெயர் தாங்கி உலமாக்களின் பின் சென்று அஹ்மதிகளுக்கு கஷ்டம் தருவதை மக்கள் இஸ்லாமிய சேவை என்று கருதுகின்றனர்.

சூரத்துல் புர்கானுடைய இந்த வசனத்துக்கு முந்தைய வசனத்தில் அல்லாஹ் கூறுகிறான்.

என் இறைவனே எனது சமுதாயம் குர்ஆனை தம் முதுகுக்கு பின்னால் போட்டுவிட்டது என்று இந்த ரசூல் கூறினார். (25:31)

மக்கத்து காபிர்கள் குர்ஆனை ஏற்றுக் கொள்ளாதது குறித்து கூறிய அதே வேளையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) தோன்றி இஸ்லாத்தின் உண்மையான போதனையை எடுத்து வைத்து மக்களை அழைக்கும் போது இதே எதிர்ப்பு ஏற்படும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இக்காலத்தில் பெரும்பாலார் திருக்குர்ஆனை மறந்துவிட்டனர். இந்நிலையில் காலத்தின் இமாம் வந்து உங்களுக்கு இஸ்லாத்தின் போதனையை புரிய வைக்க வந்துள்ளேன். அதன்மூலம் நீங்கள் அதனை நடைமுறைப்படுத்தி இஸ்லாமிய போதனையை முழு உலகிலும் பரப்ப வேண்டும் என்று கூறும் போதும் எதிர்ப்பு காட்டப்படுகிறது. அந்த ஆயத்துக்குப் பிறகு நான் குத்பாவின் ஆரம்பத்தில் ஓதிய வசனம் வருகிறது.

ஹஸ்ரத் மஸீஹ் (அலை) மற்றும் அவரது ஜமாத்துக்கும் ஆறுதல் வழங்கப்பட்டுள்ளது. திருக்குர்ஆன், இறைவனின் பெயரால் எதிர்ப்பு செய்யப்படுகிறது. திருக்குர்ஆனை புரியாததால் இது செய்யப்படுகிறது. ஆனால் கவலைப்பட தேவையில்லை. நபிமார்களுடன் எப்போதும் இதுதான் நடக்கிறது. இறைவன் நேர் வழிகாட்டுபவன். இந்த எதிர்ப்பை வைத்து பலருக்கு நேர்வழிக்கான ஏற்பாடு செய்கிறான். அவன் உங்களுக்கு உதவி செய்பவனும் ஆவான். குற்றவாளிகள், பெயர்தாங்கி உலமாக்கள், தலைவர்கள், பொதுமக்கள் எதிர்க்குமாறு தூண்டுகின்றனர். இதுவும் அவர்களுக்கு ஒருபோதும் வெற்றியை தராது.

நிச்சயமாக வெற்றிகள் ஹஸ்ரத் மஸீஹ் (அலை) உடைய ஜமாத்துக்கு கிடைக்கும். இன்ஷா அல்லாஹ். இம்மக்கள் எவ்வளவு முடியுமோ கூச்சலிடட்டும்; எதிர்க்கட்டும். எந்த முயற்சியும் ஜெயிக்காது. இந்த எல்லா எதிர்ப்புகளும் அந்த எதிரிகளின் பக்கமே திருப்பப்படும். உங்களுக்கு இறையச்சம் இருந்தால் இறைவனது பிரம்புக்கு பயப்படுங்கள். அவனது தண்டனையில் இருந்து பாதுகாப்பு தேடுங்கள். ஏனெனில் அவன் தனது அன்புற்குரியவர்களுக்காக ரோஷம் காட்டுகிறான்.

எனவே அல்லாஹ் தந்துள்ள இந்த வாய்ப்பில் இருந்து எதிரிகள் பயனடைய வேண்டும். பெயர்தாங்கி உலமாக்களின் பின்னால் சென்று உங்களது உலகையும் ஆகிரத்தையும் வீணாக்கி கொள்வதற்கு பகரகமாக உங்கள் மீது மிகவும் அனுதாபத்துடன் கீழ்கண்டவாறு கூறுகிற அம்மனிதரை ஏற்றுக் கொள்ளுங்கள்.

மிகவும் அனுதாபம் கொண்டவாறும், நலம் விரும்பியவாறும் தனது இரக்கத்தால் இறைவனது கட்டளையினால் அவன் பக்கம் அழைக்கும் போது அம்மனிதனை தஜ்ஜால் (பெரும் பொய்யன்) என்று கூறப்படுகிறது.

இதனைவிட பரிதாபம் வேறு என்ன இருக்க முடியும்? ரஹ்மானியத் என்ற பண்பு மட்டும் இல்லை எனில் அல்லாஹ்வின் தண்டனையில் இருந்து நீங்கள் பாதுகாப்பாக இருப்பது சாத்தியமே இல்லை.

எனவே அஹ்மதிகளுக்கு கஷ்டம் தருவதை இம்மக்கள் நற்பலன் தரும் என்று கருதுகின்றனர். ''ஹஸ்ரத் மஸீஹ் (அலை) தமது எஜமானரிடமிருந்து கொண்டு வந்த அந்த போதனையின் படி அமல் செய்தவாறு, மக்களே உங்களது இந்த பரிதாப நிலை எம்மை நிம்மதியிழக்கச் செய்கிறது. மீளமுடியாத அளவுக்கு இறை கோபத்தை தூண்டிவிடாதீர்கள். சாபம் இறங்கும்முன் உங்கள் எதிர்ப்பைவிட்டு விடுங்கள். இறைவனிடமிருந்து வந்தவரை குறிவைத்து தாக்குவதை விடுங்கள்'' என்று கூறுங்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) கூறுகிறார்கள்:**

''தூங்கிக் கொண்டிருப்பவர்களே, எழுந்திருங்கள். கவனமற்றவர்களே எழுந்து உட்காருங்கள். பெரும் புரட்சியின் காலம் வந்து விட்டது. இது அழவேண்டிய காலம் ஆகும். உறங்க வேண்டிய காலம் அன்று. பரிதவிக்கும்காலம், பரிகாசம் செய்யும் காலமல்ல. துஆ செய்யுங்கள். அல்லாஹ் உங்களுக்கு தண்ணீரைத் தரட்டும். இக்காலத்தில் பூரண இருளை, இருளின் உச்சகட்டத்தை பாருங்கள். பிறகு இந்த இருளை அகற்ற இறை கருணையானது ஓர் ஒளியை இறக்கியுள்ளது. பின்னிரவுகளில் எழுந்து அழுதுழுது நேர்வழியை வேண்டுங்கள். இறைஇயக்கத்தை அழிப்பதற்காக துஆ செய்யாதீர்கள். அதற்காக திட்டமிடவும் செய்யாதீர்கள். அல்லாஹ் உங்களது கவனமின்மை மற்றும் மறதியை துரத்தமாட்டான். உங்கள் மூளையின் அறியாமையை உங்களுக்கு புரிய வைப்பான். அவன் தனது அடியார்களுக்கு உதவி செய்வான். தனது கையால் நட்டிய இந்த மரத்தை அவன் ஒருபோதும் வெட்ட மாட்டான்''.

நமது எதிரிகளுக்கு அறிவைத்தருவானாக. காலத்தின் இமாமை எதிர்ப்பை விட்டு விடட்டும். இந்த அனுதாபமிக்க தூதுச்செய்தியை புரியட்டும்.

பாக்கிஸ்தானில் ஓர் அநியாய சட்டம் இயற்றப்பட்டு அஹ்மதிகளுக்கு அநீதி இழைக்கப்பட்டது. அதில் ஒரு சட்டம் ஓர் அஹ்மதி லாயிலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவை படிக்கக் கூடாது. எதிலும் எழுதி வெளிப்படுத்தவும் கூடாது. அவ்வப்போது அரசு இந்த சட்டத்தை பயன்படுத்தவும் செய்கிறது. அதிலிருந்து பயனடைய முயற்சி செய்கின்றனர். மவ்லவிகளை சந்தோஷப்படுத்துகின்றனர்.

ஸர்கோதாவின் ஒரு ஊரில் கடந்த சில தினங்களுக்கு முன் இரவில் ஓர் வீட்டுக்கு போலீஸ் வந்தது. அங்கு அஹ்மதி பள்ளிவாசலில் கலிமா எழுதப்பட்டிருந்தது. அங்கு நின்ற ஒரு சிறுவனிடம் அந்த கலிமா அடங்கிய போர்டை இறக்கச் சொல்லி எடுத்துச்சென்றது. ஜமாத்தினர் இரவோடு இரவாக மீண்டும் கலிமாவை எழுதினர். அஹ்மதி சிறுவனை எந்த அளவுக்கு பயமுறுத்தி அதனை இறக்கச் செய்தார்கள் என்ற விபரம் வரவில்லை. கலிமாவை அழித்துவிட்டு போர்டை தந்துவிட்டு சென்றுவிட்டனர். நான் அஹ்மதி சிறுவர்களிடம் கூறிக்கொள்வது என்னவெனில் இனி எப்போதாவது போலீஸ் வந்து அதனை இறக்கு என்று கூறினால், நீங்கள் இறக்க வேண்டுமானால் இறக்குங்கள் நான் ஒருபோதும் அவ்வாறு செய்ய மாட்டேன். எவ்வளவு எம்மீது அநீதி இழைத்தாலும் இழையுங்கள் என்று கூற வேண்டும்.

அஹ்மதிகள் நினைவில் கொள்ளுங்கள். இது கலிமாவாகும். ஒவ்வொரு அஹ்மதி பெரியவரும் சிறியவரும் பாதுகாக்க வேண்டும். அந்த செயலை செய்ய விரும்பினால் செய்து விட்டு போகட்டும். நாம் அந்த சட்டத்துடன் மோதவில்லை. ஆனால் ஒவ்வொரு அஹ்மதியும் அந்த செயலுக்கு உதவியாளராக ஒருபோதும் ஆகக்கூடாது. எந்த சூழ்நிலையிலும் கூடாது. கியாமத் நாளில் நமக்காக இந்த கலிமா சாட்சி சொல்ல வேண்டும்.

அவர்களையே குற்றவாளியாக்க வேண்டும். பாக்கிஸ்தான் சட்டம் கூறுகிறது. இவர்கள் தாமே உருவாக்கிய சட்டத்தின் படி முஸ்லிம்களல்ல. அவர்களுக்கு கலிமா படிக்கவும் எழுதவும் அனுமதியில்லை.

நாம் கூறுகிறோம். அல்லாஹ்வும். ரஸூலும் கலிமா சொல்பவரை முஸ்லிம்களாக்கி இருக்கும் போது உங்கள் இலக்கணத்துக்கு என்ன அருகதையுள்ளளது?

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹதீஸில் வருகிறது. திக்ருகளில் மிகச்சிறந்ததும் ஒரு மனிதனை முஃமினாக ஆக்குவதும் லாயிலாஹ இல்லல்லாஹ் என்ற கூற்றுதான். நமது ஈமானையும் இஸ்லாத்தையும் எவரும் நம்மை விட்டு பிரிக்க இயலாது.

திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான்: எவரும் உங்களுக்கு ஸலாம் கூறினால், (அவரிடம்) நீர் நம்பிக்கை கொண்டவர் இல்லை எனக் கூறாதீர்கள். (4:95)

அஹ்மதிகள் அல்லாஹ்வின் அருளால் அல்லாஹ், அவனது ரஸூல், குர்ஆன் மீது முழுமையான நம்பிக்கை கொண்டுள்ளனர். எல்லா இஸ்லாமிய கடமைகளின் மீதும் உறுதியான ஈமான் கொள்கின்றனர். வெறும் முஸ்லிம்களாக இல்லை. மாறாக உண்மையான முஃமின்களாக இருக்கின்றனர். ஏனெனில் அஹ்மதிகள் மட்டுமே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய முன்னறிவிப்பை முழுமைப்படுத்தியவாறு காலத்தின் இமாமுக்கு ஸலாம் கூறியுள்ளனர். அவரது ஜமாஅத்தில் இணைந்துள்ளனர்.

இந்த கலிமாவை அழிக்கும் சம்பவம் அந்த ஓர் ஊரில் மட்டும் நடந்ததல்ல. ஒரு சில நாட்களுக்குப் பின் இன்னொரு ஊரிலும் நடந்துள்ளது. அங்கும் காவல்துறை சென்றது. ஜமாஅத்தின் தலைவர் கதவை அடைத்துக் கொண்டு அமர்ந்து விட்டார். கதவை உடைத்துக் கொண்டு உள்ளே வருவதென்றால் வரட்டும். ஆனால் காவல்துறை உள்ளே வரவில்லை. அவர் வயதான மனிதராகவும் நோயாளியாகவும் இருந்தார். எனது பிணத்தின் மீதுதான் எவரும் உள்ளே வர முடியும் என்று உறுதியாக கூறினார். அவரது பெயர் மலக் அதா முஹம்மத் சாஹிப். தொடர்ந்து இந்த வேலையை செய்து கொண்டிருக்கிறார்கள். பிறகு திரும்பிச் சென்றனர். கலிமாவை அழிக்கவில்லை. சதர் சாஹிப் பற்றி அமீர் சாஹிப் எழுதியுள்ளார். இந்த சம்பவத்தால் அவரது இதய நோய் இன்னும் அதிகமாகியது. வீடு சென்றதும் இன்னும் நிலைமை மோசமானது. பிறகு ஒரு ஹார்ட் அட்டாக் வந்தது. அதில் அவரது உயிர் பிரிந்தது. இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். அல்லாஹ் அவரது தகுதியை உயர்த்துவானாக. இன்னொரு ஜல்ஸாவோடு சேர்த்து நான் நேற்று இவரது ஜனாஸா தொழுகையையும் தொழ வைத்தேன்.

பாகிஸ்தானில் எதிர்ப்பு மிகவும் அதிகமாக உள்ளது. பாகிஸ்தான் அஹ்மதிகளுக்காக மற்ற அஹ்மதிகளும் துஆ செய்யுங்கள்.

பாகிஸ்தான் அஹ்மதிகளிடம் ஒன்றை நினைவுபடுத்திக் கொள்கிறேன். இப்போது பாகிஸ்தானின் நிலைப்பு அஹ்மதிகளின் துஆவில்தான் உள்ளது. அதிகமாக துஆ செய்யுங்கள். பெயர்தாங்கிய உலமாக்கள் தமது குஃப்ர் ஃபத்வாக்கள் மூலம் பொதுமக்களின் அறிவை மழுங்கடித்துள்ளார்கள். முற்றிலும் அவர்களின் அறிவை அழித்து விட்டனர். எது உண்மை? எது பொய்? என்று புரிந்து கொள்வதில்லை. இன்னும் சிலரோ குற்றவாளிகள். அவர்களும் உலமாக்களின் கையில் உள்ளனர். அவர்களிடம் எந்த நன்மையை எதிர்பார்ப்பது வீணானது. ஆனால் புரியாத குறைமதி படைத்த சிலர் மவ்லவிகளின் வார்த்தைகளை நம்பி விடுகின்றனர். அவர்களுக்கு மார்க்க அறிவும் இல்லை. அவர்களுக்கும் அல்லாஹ் அறிவை வழங்குவானாக. உண்மையை புரிய வைப்பானாக. அல்லாஹ்வின் அருளால் நல்லியல்பு கொண்ட மக்களும் பலர் இருக்கின்றனர். அவர்கள் மவ்லவிமார்களின் இந்த செயலால் அதிருப்தி அடைந்துள்ளனர். அவர்கள் தமது கோழைத்தனத்தை விட்டுவிட்டு குரலை உயர்த்த வேண்டும். மவ்லவிகளுக்கு அவர்களது மிம்பர் நிலைக்க வேண்டும். அதில் நின்று கொண்டு மக்களை முட்டாளாக்கிக் கொண்டிருக்க வேண்டும். இது தான் தலைவர்களின் நிலையும் ஆகும். பாகிஸ்தானின் பொருளாதார சீர்கேடு எல்லையை தொட்டு விட்டது. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் பத்திரிகைகளிலும் தினமும் செய்தி வருகிறது. யாரும் எவரையும் பொருட்படுத்தவில்லை. வன்முறை மிகவும்

தீவிரமடைந்துள்ளது. என்ன நடக்கிறது என்பது பற்றி யாருக்கும் கவலையில்லை. தினமும் 10-15 பேர் செத்துக் கொண்டிருக்கின்றனர். சில வேளை இன்னும் அதிகமாகவே நடக்கிறது. வானத்து தண்டனைகளும் சூழ்ந்துள்ளது. அது குறித்தும் யாரும் யோசிக்கத் தயாரில்லை. கடந்த சில நாட்களுக்கு முன் வெள்ளத்தால் ஒரு பகுதி சூழப்பட்டது. தண்ணீர் எங்கிருந்து வருகிறது என்றும் தெரியவில்லை. பல கிராமங்கள் தண்ணீரில் மூழ்கி விட்டன. மலையின் மீது ஏறினாலும் தண்ணீர் அங்கும் வந்து விடுகின்றது. பாதைகள் சீர்குலைந்து விட்டன. கப்பலில் சென்று உதவி செய்தவர்களும் அதனை நிறுத்தி விட்டனர். மக்கள் மலைக்கு மேல் செல்ல செல்ல தண்ணீரும் மேலே மேலே வந்து கொண்டிருக்கிறது. இப்போது ஹெலிகாப்டர் மூலம் கூட மக்களை வெளியேற்றுவது கஷ்டமாகி விட்டது என்று கேள்விப்பட்டேன். இதுதான் அங்குள்ள நிலைமை. இதெல்லாம் என்னவென்று சிந்தியுங்கள்? இந்த தண்ணீரின் வேகம் மற்ற பகுதிகளிலெல்லாம் பரவும் அபாயம் உள்ளது. ஆனால் தலைவர்களுக்கும் இதுபற்றியெல்லாம் எந்த கவலையும் இல்லை. அஹ்மதிகளின் மீது புழுதிவாரி வீசவும் அஹ்மதிகளின் கலிமாவை அழிப்பது குறித்தும் தான் யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். அஹ்மதிகளைக் கொல்ல வேண்டும். அதுதான் அவர்களின் கவலை. அஹ்மதிகளை கொலை செய்வது அவர்களுக்கு ஷஹாதத்தின் பதவியை அளித்து விடும். ஏனெனில் அல்லாஹ், ரஸுலுக்காக இந்த அநீதிக்கு ஆளாகியுள்ளனர். கலிமா சொல்லும் நிலையிலும் கொலை செய்யப்படுகின்றனர். இதனைக் குறித்துதான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒருமுறை அவர் வாயளவில்தான் கலிமாக சொல்கிறார் என்று கூறியதும், நீர் உள்ளத்தைப் பிளந்து பார்த்தீரா? என்று கேட்டார்கள். உள்ளத்தால் ஒருவர் கலிமா சொன்னாரா வெறும் வாயளவில் சொன்னாரா என்று மற்றவர் கூற முடியாது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு இறைவனுடன் நேரடியாக தொடர்பு இருந்தது. அவர்களுக்கும் கூட இவர் உள்ளத்தால் கலிமா சொன்னாரா, வாயளவில் சொன்னாரா என்று தெரியாது. இந்த மவ்லவிகளுக்கு என்ன தகுதியிருக்கிறது?

கடந்த சில நாள்களுக்கு முன் கராச்சியில் ஒரு ஷஹாதத் நடந்தது. கராச்சியைச் சேர்ந்த ஹாபிஸ் அஹ்மத் ஷாகிர் சாஹிப் இரவில் 12.30 மணியளவில் கடையை மூடி விட்டு மெடிக்கல் ஸ்டோரிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது 48 வயதான அம்மனிதரை வழியில் சுட்டு விட்டனர். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

காதிமாக இருந்த போதும் அன்சாருல்லாஹ் உறுப்பினர் ஆன பிறகும் கூட நல்ல செயல்படக்கூடிய உறுப்பினராக இருந்தார். குறிப்பாக திருக்குர்ஆன் ஓதுவதில் ஆர்வம் உள்ளவர். அர்ப்பணிப்பு மனப்பான்மையுள்ள கண்ணியமிக்க அஹ்மதியாக இருந்தார். இவரது மனைவி தவிர தாயாரும் கூட உயிருடன் இருக்கிறார்கள். 19 வயதுடைய குர்ரத்துல் ஐன், 14 வயதுடைய தூபா ஆகிய இரு மகள்கள் உள்ளனர். 17 வயதில் பாயிக் அஹ்மத் என்ற ஒரு மகனும் இருக்கிறார்.

அல்லாஹ் இவரது தாயாருக்கும் பிள்ளைகளுக்கும் பொறுமையை வழங்குவானாக.

இந்த துன்பங்கள், ஷஹாதத்துகள், கலிமா அழிப்பு போன்ற காரியங்கள் நான் முன்னர் கூறியது போன்று மவ்லவிகளின் தூண்டுதலால் நடக்கிறது. முஸ்லிம் - முஃமினின் இலக்கணம் என்னவென்று அல்லாஹ்வின் ரஸுல் கூறியதை நான் சொன்னேன். இந்த கொலை செய்பவர்களைப் பற்றி திருக்குர்ஆன் கூறுகிறது.

எவரேனும் நம்பிக்கை கொண்ட ஒருவனை வேண்டுமென்றே கொலை செய்து விட்டால், அவனுக்குரிய தண்டனை நரகமேயாகும். அவன் அதில் நெடுங்காலம் தங்கி விடுவான். அல்லாஹ் அவனிடத்துக் கோபங்கொண்டு அவனைச் சபித்துவிடுவான். மேலும் அவனுக்கு மாபெரும் ஆக்கினையையும் ஏற்பாடு செய்துள்ளான். (4:94)

பிறகு அஹ்மதி ஒருபுறம் இருக்கட்டும். ஒருவர் மற்றவர் மீது கொண்ட பகைமையாலும் எந்த இலக்கணத்தின்படி அவர்கள் ஒருவரை முஸ்லிம் என்று கூறுகிறார்களோ அவர்களையே கொலை செய்கின்றனர். இந்த கொலைகளும் பாகிஸ்தானில் நடக்கின்றன. ஒரு கொலைக்காக திட்டமிடுபவரும் கொலை செய்தவருக்குரிய அதே குற்றத்தை செய்தவராவார். எவ்வாறிருப்பினும் நாம் நமது விவகாரத்தை அல்லாஹ்விடத்தில் விட்டு விட்டு பொறுமை செய்கிறோம். செய்து கொண்டே செல்வோம் இன்ஷா அல்லாஹ்.

அல்லாஹ் ஷஹீதுகளைப் பற்றி கூறுகிறான்: அல்லாஹ்வின் பாதையில் கொல்லப்பட்டவர்களை, மரணித்தவர்கள் என்று நீங்கள் ஒருபோதும் எண்ண வேண்டாம். மாறாக, அவர்கள் தங்கள் இறைவனிடம் உயிருள்ளவர். (மேலும்) அவர்கள் (ஆன்மீகமாக) உணவளிக்கப்படுகின்றனர். (3:170)

ஷஹீதுகளுக்கு மறு உலக நிஃமத்துகளைப் பற்றிய வாக்குறுதியை அல்லாஹ் தந்துள்ளான். நிரந்தர வாழ்வு அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால் எதிரிகளைப் பற்றி வருகிறது.

நீங்கள் அதை பொய்யாக்குவதை உங்கள் வாழ்விற்கு தேவையான பொருளாக ஆக்கிக் கொண்டீர்களா? (56:83)

இந்த மவ்லவிகளின் உணவு எப்படியோ அதே வழியில்தான் அரசியல்வாதிகளுக்கும் கிடைக்கிறது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களை பொய்யாக்குவதில்தான் அவர்களின் உணவு இருக்கிறது. பொய்யாக்குவதை தமது வாழ்வாதாரமாக ஆக்கிக் கொண்டனர். உண்மையான உணவளிப்பவனை மறந்து விட்டனர்.

நியாயமின்றி ஒருவரை கொலை செய்வதன் தண்டனையை அல்லாஹ் சூரா அந்நிஸாவின் 94 வது வசனத்தில் கூறியிருப்பதை நான் வாசித்துக் காட்டினேன்.

இது பயப்பட வேண்டிய விஷயம்; சிந்திக்க வேண்டும். ஜமாஅத் முன்னேறறத்துடன், உலகியல் எதிர்ப்பும் அதிகரிக்கிறது. நான் ஏற்கனவே கூறி வருவது போன்று ஒவ்வொரு நபியின் காலத்திலும் அல்லாஹ்வின் கூற்றிற்கேற்பவே எதிர்ப்பு காட்டப்படுகிறது. அது மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுக்கும் நடக்க வேண்டியிருந்தது. அவர்களை ஏற்றுக் கொண்ட எல்லா இடத்திலும் இது நடக்க வேண்டியிருந்தது; அதுவே நடந்து கொண்டிருக்கிறது. சில இடங்களில் அதிகமாக சில இடங்களில் குறைவாக நடக்கலாம்; பல்வேறு முறைகளில் நடக்கலாம்.

இக்காலத்தில் மிஸ்ரில் (எகிப்து) ஜமாஅத்திற்கு பெரும் எதிர்ப்பு காட்டப்படுகிறது. இந்த எதிர்ப்பினால் அரசு அதிகாரிகளில் சிலர் மவ்லவிகளின் பின்னால் நின்று கொண்டு இந்த வேலைகளைச் செய்கின்றனர்.

அவர்களின் ஓர் அபாண்டம் என்னவென்றால், நவூதுபில்லாஹ் அஹ்மதிகள் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (அலை) அவர்களை காத்தமுன்னபிய்யீன் ஆக நம்புகின்றனர் என்பதாகும். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

நமது கருத்தின்படி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தகுதி எல்லாரையும் விட உயர்ந்தது. அவருக்கு பிறகு ஒரு ஷரீஅத் நபி வரவும் முடியாது. குர்ஆனுக்குப் பிறகு ஒரு ஷரீஅத்தை உடைய வேதம் வரவும் முடியாது.

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்களுடைய வாதமெல்லாம் தூய்மையான அவர்களின் தாசராக இருப்பதால்தான் இந்த தகுதி தமக்கு கிடைத்துள்ளது. அவர்களிடமிருந்துதான் பெற்றதாகவே வாதம் செய்துள்ளார்கள்.

இக்காலத்தில் நான் எல்லாரையும் விட அதிகமாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை நேசிப்பதால் என்னை இக்காலத்தில் நியமித்துள்ளான் என்றுதான் கூறுகின்றார்கள். எனவே கண்ணை மூடிக் கொண்டுள்ள படித்தவர்களிடம் கூறிக் கொள்வேன். இந்த குறைமதி உடையவர்களைப் போன்று ஆங்காங்கே கேட்டதையெல்லாம் நம்புவதற்கு பதிலாக அஹ்மதிகளின் தூதுச் செய்தியை படியுங்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடைய வாதத்தைக் கேளுங்கள்!

பிறகு உங்கள் குற்றச்சாட்டு அதிலிருந்து நிரூபணமானால் பிறகு சொல்லுங்கள். முதலில் எமது நிலைப்பாடு என்ன என்பதை கேளுங்கள். நீங்கள் கேட்பதும் இல்லை; கேட்கத் தயாராகவும் இல்லை. நீங்களாகவே முடிவு செய்து கொண்டு செல்கிறீர்கள். இறைவனுக்கு பயந்து கொள்ளுங்கள்; இறை கோபத்திற்கு அஞ்சுங்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இஸ்லாத்திற்கு செய்த தொண்டுகளை காணுங்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது அஹ்மதிகளின் ரோஷம் எவ்வாறு என்பதை பாருங்கள். அப்படி பார்த்தால்

ஆட்சேபனைக்குரியவர்கள் நாங்களல்ல. நீங்களாகவே இருப்பீர்கள். பார்க்காமலேயே முடிவு செய்தவர்கள்தான் ஆட்சேபனைக்குரியவர்களாக இருப்பர். இந்த உலமாக்களின் நிலையை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எழுதியுள்ளார்கள். அதனை எடுத்து வைக்கிறேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்திலிருந்து இன்று வரை இந்த பெயர்தாங்கி உலமாக்களின் இயல்புகளிலும் செயல்களிலும் எந்த வித்தியாசமும் இல்லை.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நாம் இஸ்லாத்தின் உலமாக்கள் என்று அம்மக்கள் கூறுகின்றனர். (ஆனால்) நபியின் மார்க்கத்திலுள்ள மிகவும் சோம்பேறித்தனமானவர்கள். விலங்குகளைப் போன்று உண்ணல் குடித்தல் தவிர வேறு எதுவும் அவர்களிடம் இல்லை. தமது சொல் செயல்களால் மார்க்கத்திற்கு எவ்வித உதவியும் செய்வதில்லை. அல்லாஹ்வுடைய சிறப்பான அடியார்களாக இருப்பவர்கள் மிகவும் சொற்பமானவர்களே. உண்மையைக் கேட்டு உணர்ச்சி பெறுபவர்கள் இல்லை. உண்மை என்றால் என்ன? நற்பலன் என்றால் என்ன? என்று தெரியவில்லை. பித்னாவிலிருந்து திரும்புவதில்லை. உண்மையுடன் பொய்யை கலந்து விடுகின்றனர். குறையைக் கண்டுபிடித்து மக்களை ஏமாற்றுவதற்காக அவ்வாறு செய்கின்றனர்.

அஹ்மதிகள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை காத்தமுன்னபிய்யீன் என்று நம்புகின்றனர் என்ற அவதூறும் அதுபோன்ற ஒன்றுதான். முழுக்க முழுக்க பொய்யும் அவதூறும் ஆகும். குறைமதி கொண்டவர்களை இதுபோன்ற அவதூறுகளால் தூண்டி அஹ்மதிகளுக்கு எதிராக கிளப்பி விடுகின்றனர்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அல்லாஹ் ஒருவரை மக்களை சீர்திருத்துவதற்காக எழுப்பும் போது மக்கள் அவரை கன்னாஸ் (மக்களின் உள்ளங்களில் தீய எண்ணங்களை உருவாக்குபவன்) என்று கருதுகின்றனர். முஃமினை காஃபிர் ஆக்குகின்றனர். அவர்களின் பாதம் நன்மையின் பக்கம் செல்வதில்லை. அவர்களின் நாவுகள் காஃபிர் ஆக்குவதை தவிர வேறு பக்கம் குனிவதில்லை. மார்க்க சேவை என்றால் என்ன என்று தெரியாது. உண்மையை பொய்யுடன் கலந்தனர். நம்மீது பொய்யை இட்டுக் கட்டிக் கூறினர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய பரக்கத்திற்கு வந்த பெரும் சோதனை இது. இக்காலத்தில் பெரும்பாலான உலமாக்கள் நீதி நேர்மையை விட்டு விட்டனர். மார்க்க எதிரிகளைப் போன்று வேலை செய்கின்றனர். பொய்யில் வீழ்கின்றனர். பொய் தம்மை உண்மையின் தாக்குதலிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்கின்றனர். பொய்யை உண்மையிலிருந்து காப்பாற்ற முயற்சி செய்கின்றனர். கம்பீரமிக்க இறைவனை சிறிதும் பொருட்படுத்துவதில்லை. பெரும் சண்டைக்காரர்களைப் போன்று காஃபிர்களுடன் உதவிக்கு நிற்கின்றனர். தாமே உண்மையில் இருப்பதாக கருதுகின்றனர். ஆனால் முழுக்க முழுக்க பொய்யில் இருக்கின்றனர். தமது மன இச்சைகளை மட்டுமே அறிந்திருக்கின்றனர். சிந்திப்பதில்லை. சத்திய வார்த்தைகளை கேட்டுக் கொண்டு பின்னரும் விஷமம் செய்கின்றனர். அவர்கள் மரணத்தை நோக்கி அழைக்கப்பட்டவர்களைப் போன்றவர்கள். உலகம் விசுவாசமற்றது என்பதை அறிந்து கொண்டே உலகை பெரும் காதலர்களைப் போன்று நேசிக்கின்றனர். அவர்களின் செயல்கள் வீட்டில் ஒரு விதமாகவும் வெளியில் வேறு விதமாகவும் இருக்கின்றது.

காட்டுவதற்காக வேலை செய்பவர்களின் உதாரணம், ஒரு மவ்லவி இஸ்லாத்திற்காக பொருள் தியாகம் செய்வதை வலியுறுத்தி சொற்பொழிவாற்றினார். அவரது மனைவி மவ்லவியின் உணர்ச்சிப்பூர்வமான சொற்பொழிவைக் கேட்டு தாக்கத்திற்குள்ளானாள். வீட்டிற்கு வந்து தங்க நகையை கழற்றி மவ்லவியிடம் கொடுத்தாள். இதனை என் சார்பாக உங்களது திட்டத்திற்கு வைத்துக் கொள்ளுங்கள் என்று கூறினாள். மவ்லவி சாஹிப் கேட்டார். இது என்ன? நீங்கள் மிகவும் வலியுறுத்திக் கூறினீர்கள். எனவே இதனை தருகிறேன் என்று மனைவி கூறினாள். உடனே மவ்லவி சாஹிப், நான் உனக்கு சொல்லவில்லை. மற்றவர்களுக்குதான் சொன்னேன் என்று கூறினார். இவ்வாறு தான் மவ்லவிகள் இருக்கின்றனர். காஃபிர்களின் குழப்பம் எந்த அளவுக்கு அதிகமாகி உள்ளது என்று அவர்கள் நன்றாக அறிந்திருக்கின்றனர். மார்க்கம் விஷமிகளால் குறி வைக்கப்படுகிறது. விஷமம் அதிகமாகிக் கொண்டே செல்கிறது. ஐரோப்பாவிலும் இதனை காண்கிறோம்.

சில இணையதளங்களில் அல்லது பத்திரிகைகளில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிராக எழுதப்படுகின்றன. அல்லது பாகிஸ்தான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு எதிராக ஃபேஸ் புக் தரப்பட்டது. இப்போது நிறுத்தப்பட்டுள்ளது. வீணான விஷயங்கள் அதில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பற்றி எழுதப்பட்டுள்ளது. இதற்கெல்லாம் காரணம் முஸ்லிம்கள் ஒன்றாக இல்லை. என்ன செய்ய முடியுமோ செய்யுங்கள்? என்று அவர்கள் நினைக்கின்றனர். ஒருபோதும் முஸ்லிம்களால் ஒன்றிணைய முடியாது. காலத்தின் இமாம் இஸ்லாத்தைப் பாதுகாக்க வந்துள்ளார்கள். அவர்களுக்கு உதவி செய்ய இவர்கள் விரும்புவதில்லை.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

காஃபிர்களின் விஷமம் எவ்வளவு அதிகமாகி உள்ளது. மார்க்கம் எதிரிகளின் குறியாக இருப்பதை நன்றாக அறிந்துள்ளனர். உண்மை இந்த விஷமிகளின் காலுக்குக் கீழ் போடப்பட்டு விட்டது. காஃபிர்களைப் போன்று இருக்கின்றனர். மார்க்க அனுதாபத்துடன் சிறிதும் கவனம் செலுத்துவதில்லை. காஃபிர்கள், தூய்மையற்றவர்களின் வார்த்தையை சிறிதும் பொருட்படுத்துவதில்லை. ஒரு ரோஷமிக்க மனிதனைப் போன்று நடந்து கொள்வதில்லை. கர்ப்பவதியான பெண்ணைப் போன்று தம்மை பெரும் சுமையை உடையவராக காட்டுகின்றனர். ஆனால் எந்த சுமையும் அவர்கள் மீது இல்லை. நன்மையான விஷயத்திற்காக எழும்போதெல்லாம் சோம்பேறித்தனமே காட்டுகின்றனர். முயற்சியின் அடையாளம் அவர்களிடம் காண முடியாது. எப்போது மன இச்சைக்குரிய ஏதாவது ஒரு விஷயத்தைக் கண்டால் அதன் பக்கம் ஓடுகின்றனர். மனஇச்சைக்கே குனிகின்றனர். இதுவே நமது உலமா பெருமக்களின் நிலையாகும். காஃபிர்கள் இஸ்லாத்தை அழிக்க கடும் முயற்சி செய்கின்றனர். அவர்களின் எல்லா ஆலோசனைகளும் உலகிற்காகவே இருக்கிறது. மார்க்கத்தின்பால் திரும்புவதில்லை.

இதுவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வேதனையின் வெளிப்பாடு ஆகும். உலமாக்களின் நிலைமையை எடுத்துரைத்து இஸ்லாத்தின் நிலை என்ன? என்ன செய்ய வேண்டும்? என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? என்று விளக்கினார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வெறும் எழுத்தில் மட்டும் உலமாக்களுக்கு எதிர்ப்பு காட்டிவிட்டுப் போகவில்லை. மாறாக நாம் அறிந்திருப்பது போன்று எண்பதுக்கும் மேற்பட்ட நூல்கள் இஸ்லாத்தை தற்காக்கும் பொருட்டு எழுதியுள்ளார்கள். உலமாக்களுக்கு உண்மையின் வழியைக் காட்ட முயற்சி செய்துள்ளார்கள். ஒவ்வொரு மார்க்கத்தையும் ஒப்பாய்வு செய்து இஸ்லாத்தின் மேன்மையை நிரூபித்துக் காட்டினார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அந்தஸ்தை தம்மை ஏற்றுக் கொண்டவர்களின் உள்ளத்தில் நிலைநாட்டினார்கள். அல்லாஹ்வின் ஏகத்துவத்தை நிலைநாட்ட தனது வாழ்வை அர்ப்பணித்தார்கள். தொடர்ந்து எடுத்துச் செல்கிற இந்த மிஷனை தனக்கு பின்னால் விட்டுச் சென்றார்கள். அவர்களது பணிகளை நீதியை விரும்புகிற ஒவ்வொருவரும் ஒப்புக் கொண்டனர். அன்னார் மரணிக்கும்போது மற்றவர்கள் எடுத்துக் கூறிய சில விஷயங்களை எடுத்து வைக்கிறேன்.

மவ்லானா அபுல் கலாம் ஆஸாத் முஸ்லிம் தலைவர் ஆவார். ஆனால் அஹ்மதி அல்ல. அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மரணித்த போது எழுதினார்.

மிர்ஸா சாஹிப் உடைய சில வாதங்கள், கொள்கைகளில் கடும் கருத்து வேறுபாடு இருந்த போதிலும், அவர் முஸ்லிம்களிடம் – ஆம் படித்த விபரமுள்ள முஸ்லிம்களிடம் ஒரு பெரும் மனிதர் நம்மை விட்டு சென்று விட்டார் என்ற உணர்வை ஏற்படுத்தியுள்ளார். இஸ்லாத்தின் எதிரிகளுக்கு எதிராக இஸ்லாத்தை தற்காப்பு செய்வது அவருக்கு மட்டுமே உரிய சிறப்பாக இருந்தது. அது முடிந்துபோய் விட்டது. இஸ்லாத்தின் எதிரிகளுக்கு எதிராக இஸ்லாத்திற்கு வெற்றி தேடித்தந்ததே அன்னாரது சிறப்பம்சம் ஆகும். எனவே எதிரிகளை சிதறடிக்கும் இப்பணி தொடர்வதற்காக அன்னார் செய்த பணிகளை நாம் ஒப்புக் கொண்டே ஆக வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியுள்ளோம்.

இது அவர்களின் கருத்து, அல்லாஹ்வின் கருவூலத்தில் இருந்து அன்னார் எடுத்து வழங்கியவை இன்று வரை எதிரிகளை வாயடைக்க வைத்துக் கொண்டிருக்கின்றன.

**பிறகு எழுதுகிறார்:**

''மிர்ஸா சாஹிப் உடைய படைப்புகள் கிறித்தவர்கள், ஆர்யர்களுக்கு எதிராக வெளியிடப்பட்டது. அவை மிகவும் பிரபலமாகி விட்டன. அதனை எவரும் அறிமுகப்படுத்த தேவையேயில்லை. அவர்கள் முழுமைப்படுத்திய பணிகளை நாம் உளப்பூர்வமாக ஒப்புக் கொள்ளவே வேண்டும்.''

முஸ்லிம்களின் கடமை அவர்கள் இஸ்லாத்தை பாதுகாக்க வேண்டும். ஆனால் அவர்களின் தவறால் அதனை அவர்களால் செய்ய முடிந்ததில்லை. அப்பணியை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் செய்தார்கள்.

**பிறகு எழுதுகிறார்:**

''இஸ்லாத்திற்காக (ஆலிம்கள்) எதுவும் செய்ததில்லை. செய்ய முடிந்ததில்லை. இந்த முஸ்லிம் சமுதாயத்தின் நிலை எப்படி ஆகிவிட்டது எனில் ஒருபுறம் நமது முழு கிறித்தவ உலகமும் இஸ்லாத்தின் உண்மையான ஞானத்தை அழிக்க விரும்புகிறது. இஸ்லாத்தின் ஞான ஒளியை தமது முன்னேற்றத்திற்குரிய வழியில் உள்ள தடையாகக் கருதி அழிக்க விரும்புகிறது. சிந்தனை மற்றும் செல்வம் என்ற இரு சக்திகளும் அவர்களுக்கு (கிறித்தவர்களுக்கு) உதவி செய்தன.

முஸ்லிம்களுக்கோ இதற்கெதிராக எந்த ஆதாரமும் எடுத்து வைக்க இயலவில்லை. இஸ்லாத்தை எதிர்த்து நிற்பவர்களை எதிர்த்து தாக்குதல் தொடுக்கவோ அல்லது தற்காப்பு செய்யவோ ஆற்றல் இருந்ததில்லை.''

**பிறகு எழுதுகிறார்:**

முஸ்லிம்களின் சார்பாக தற்காப்பு முயற்சி தொடங்கியது என்றால் அதில் ஒரு பங்கு மிர்ஸா சாஹிபுக்கே சேரும்.

ஒரு பங்கு என்ன? அப்பணியை முழுமையாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்தான் செய்தார்கள். முஸ்லிம்களாக இருந்தவர்கள் – உண்மையை விரும்புபவர்களாக இருந்த முஸ்லிம்கள் கூட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பணிகளை புகழ்ந்துள்ளார்கள். அதனை நான் எடுத்துக் கூறினேன். அதுமட்டுமின்றி முஸ்லிமல்லாதவர்கள் கூட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பணிகளைக் கண்டு அச்சம் கொண்டவர்களாகவே இருந்தனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இஸ்லாத்தின் மகத்தான ஜெனரல் ஆக இருந்தனர். அன்னாரின் போதனைகள் கிறித்தவர்களின் முன்னேற்றத்தை தடை செய்தது.

தமது முன்னேற்றம் இந்தியாவில் மட்டுமல்ல. ஆப்பிரிக்காவிலும் கூட ஜமாஅத்தே அஹ்மதிய்யா மூலம் இஸ்லாமிய தூதுச் செய்தியின் மூலம் தடைபட்டு விட்டது என்று கிறித்தவர்களே ஒப்புக் கொள்ள வேண்டியயது. அது சம்பந்தமான சில உதாரணங்களை எடுத்து வைக்கிறேன்.

அமெரிக்கா மிஷனரி பாதிரி மிஸ்டர் ரேவர்ட்கார் எழுதுகிறார்:

ஜமாஅத்தே அஹ்மதிய்யாவின் மூலம் இஸ்லாம் இங்கு (சிரோலியோனில்) வந்து சேர்ந்துள்ளது. சிரோலியோனில் நவாஹி என்ற பகுதியில் கிறித்தவத்துக்கு எதிராக முழுமையான வெற்றி இஸ்லாத்திற்கு கிடைத்துள்ளது. உதாரணமாக காமியா என்ற ஊரில் அமெரிக்க கிறித்தவ மிஷன் – ஐ சில காலத்திற்கு மூட வேண்டியதாகி விட்டது.

இன்னொரு கிறித்தவ எழுத்தாளர் S.T.V.லிங்ஷன் என்பவர் தனது கானா யுனிவர்சிட்டியின் பேராசிரியர் தனது Christ and Muhammad என்ற நூலில் எழுதுகிறார்:

கானாவில் ரோமன் கத்தோலிக்கர் மட்டுமின்றி கிறித்தவர்களின் எல்லா முக்கிய பிரிவுகளும் முஹம்மதை பின்பற்றுபவர்களுக்காக களத்தை காலியாக்கி தந்து விட்டனர். சில பகுதிகளில் கிறித்தவம்

வளர்ச்சியடைகிறது. ஆனால் தெற்கு பகுதியில் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு தான் வெற்றி கிடைத்துள்ளது. கோல்கோஸ்ட் போன்ற பகுதிகளும் மிகவும் ஆபத்திற்கு உள்ளாகி விட்டது. இளைஞர்களின் கணிசமான பகுதி அஹ்மதிய்யத்தை நோக்கி போய்க் கொண்டிருக்கிறது. இது நிச்சயமாக கிறித்தவர்களுக்கு பெரும் பகிரங்கமான சவாலாகும். இனி ஆப்பிரிக்காவில் ஹலால் ஜெயிக்குமா அல்லது சிலுவை ஜெயிக்குமா என்று முடிவெடுக்க வேண்டியதுதான் பாக்கி உள்ளது.

இன்ஷா அல்லாஹ் ஹலால்தான இங்கு ஜெயிக்கும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது வேதனையை குறிப்பிடுகிறார்கள்.

எனது அன்றாட வாழ்வின் நிம்மதி கீழ்கண்ட விஷயத்தில்தான் உள்ளது. அதுவன்றி என்னால் உயிர்வாழ இயலாது. அது என்னவென்றால் அல்லாஹ் தனது ரஸூல், அவனது வார்த்தை ஆகியவற்றின் கம்பீரத்தை உலகிற்கு வெளிப்படுத்திக் காட்ட வேண்டும். என்னை அனுப்பியவனை திருப்திப்படுத்துவது எனக்கு போதுமானது. என்னிடம் அவன் கூறிய விஷயங்களை உலகிற்கு வெளிப்படுத்துவதே எனக்கு ரசணை மிக்க பணியாகும்.

எனக்கு தரப்பட்டதை மற்றவருக்கும் தர வேண்டும் என்று விரும்புகிறேன். எஜமானனின் அழைப்பில் எல்லாரையும் இணைக்க வேண்டும். ஆரம்பத்திலிருந்தே அழைக்கப்பட்ட அனைவரையும் இதில் இணைக்க வேண்டும். இந்த நோக்கத்தை முழுமைப்படுத்துவதற்காக உயிரை அர்ப்பணிக்கவும் தயாராக நிற்கிறேன். இறைவன் எனது துஆவை வீணாக்க மாட்டான் என்று நம்புகிறேன். அவன் எனது எல்லா விருப்பங்களையும் நிறைவேற்றுவான்.

எனவே இத்தகைய ஒரு மனிதன் மீது அபாண்ட பழி சுமத்த முடியுமா? தன்னைத்தானே காத்தமுன்னபிய்யீன் என்று கருதுகிறார் என்று கூற முடியுமா? தனது தகுதியை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை விட உயர்வாக கருதுபவர் என்று கருத முடியுமா? நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய போதனையை உணர்ந்து லாயிலாஹ இல்லல்லாஹ்வின் உண்மையான பொருளை உணர வேண்டும். நாம் தான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கத்மே நுபுவ்வத்தின் தகுதியை உணர்ந்தவர்கள் ஆவோம். ஒவ்வொரு காலத்திலும் அவர்கள் மீது ஆட்சேபனைகளை தேடிப்பிடித்து நமக்கு எதிராக பெயர் தாங்கிய உலமாக்கள் மக்களை தூண்டி விட்டு தனது இலக்கை அடைய விரும்புகின்றனர். பொதுமக்கள் சிந்திக்க வேண்டும்.

கலிமா அழிக்கப்படுகிறது. கலிமாவுக்காக அஹ்மதிகள் ஜெயிலில் அடைக்கப்படுகின்றது. கலிமாவின் பெயரால் அஹ்மதிகள் ஷஹீதாக்கப்படுகின்றனர். இதே கலிமா மரணத்திற்குப் பிறகு நமது சார்பாக சாட்சி கூறும்.

இவர்களே உண்மையில் கலிமா கூறியவர்கள் என்றும் அஹ்மதிகளுக்கு அநீதியிழைத்தவர்கள் ஷஹீதாக்கியவர்களுக்கு எதிராகவும் சாட்சி கூறும்.

ஜன்னத்தின் நற்செய்தி நிரந்தர வாழ்வை நமக்கு தருகிறான். எனவே நாம் மகிழ்கிறோம். உயிர் தியாகிகள் நிரந்தர வாழ்வுக்குரிய நற்செய்தியை பெறும் அதே வேளையில் நம்மில் ஒவ்வொருவரும் உறுதியான பாதத்துடன் நிலைநிற்கின்றோம். அல்லாஹ்வின் அன்பை ஈர்ப்பவர்களாகின்றோம். இந்த ரூஹை ஒருபோதும் மரணிக்க விடாதீர்கள். அல்லாஹ் நமக்கு அதற்கான தவ்ஃபீக் தருவானாக. இன்று இந்த ஷஹீதின் ஜனாஸா தொழுகையை ஜுமுஆவுக்குப் பிறகு நடத்துவேன். மலக் அதாவுல் முஹம்மத் சாஹிபையும் அதில் சேர்த்துக் கொள்ளுங்கள்.

அதுபோன்று மிஸ்ரில் உள்ள நமது அஹ்மதி அஹ்மது முஹம்மது ஹாக்கம் இல்ம் ஷாஃபி. இவர் வாலிப வயதில் மரணமடைந்து விட்டார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

இவர் டாக்டர் முஹம்மது ஹஸன் சாஹிபுடைய மூத்த மகன். ஹில்மி ஷாபி சாஹிப் உடைய பேரன். ஹில்மி ஷாபி சாஹிப் பற்றி எல்லாருக்கும் தெரியும். லிகாமல் அரப் நிகழ்ச்சியில் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களுடன் பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டுள்ளார். இளம் வயதிலேயே

ஊனமுற்றவராக வீல் சேரில் அமர்ந்திருந்தாலும் மிகவும் பொறுமையுடன் தனது இயலாமையை சகித்துக் கொண்டார். 'நான் சகித்துக் கொள்வேன். நீங்கள் கவலைப்பட வேண்டாம் என்று எப்போதும் தாயாரிடம் கூறுவார். அவரது பொறுமையைப் பார்த்து நான் வியந்துள்ளேன்' என்று அவரது தாயார் கூறுகிறார். நோய் முற்றிய நிலையிலும் அவருக்கு யாராவது ஆறுதல் கூறினால் அவர் மற்றவருக்கு சமாதானம் சொல்லும் அளவுக்கு மனவலிமை பெற்றிருந்தார். அவரது அனைத்து சகோதர சகோதரிகளையும் விட மிகவும் கட்டுப்படக் கூடியவர். அவரது தந்தை டாக்டர் ஹாதிம் ஷாபி சாஹிப் சிறையில் அடைக்கப்பட்ட அஹ்மதிகளுள் ஒருவராக இருந்தார். ஹாதிம் சாஹிப் ஜமாஅத்தின் தலைவராகவும் இருந்தார். இவர் ஊனமுற்ற நிலையிலும் Business –ல் டிகிரி பெற்றுள்ளார். கம்பியூட்டர் படித்துக் கொண்டிருந்தார். தமது பாட்டனார் போன்று Literature –களை உருவாக்குவதில் தாமும் ஒத்துழைக்க வேண்டும் என்ற விருப்பம் இருந்தது. கிலாஃபத்துடன் நல்ல அன்பு இருந்தது. எனது கிலாஃபத்தில் ஜல்ஸாவுக்கும் வந்திருந்தார்.

தாயார் கூறுகிறார்: வபாத்தின் போது அவரது நாவில் இன்ன அவ்வல பைதின் உலிய லின்னாஸி பிபக்கா என்ற திருக்குர்ஆன் வசனம் (3:97) அவரது நாவில் வந்தது. பிறகு லப்பைக் அல்லாஹும்ம லப்பைக் என்று கூறினார். அவருக்கு சில காலம் முன்பு டயாலிஸில் நடந்தது.

தந்தையார் இறைவழியில் கைதாகி இருந்ததால் ஜனாஸாவில் கலந்து கொள்ள முடியவில்லை. அல்லாஹ் அவர்களது பெற்றோருக்கும் உறவினர்களுக்கும் அழகிய பொறுமையை வழங்குவானாக. அல்லாஹ் ஒவ்வொரு அஹ்மதியையும் ஒவ்வொரு விஷமத்திலிருந்தும் பாதுகாப்பானாக.

★ ★ ★ ★ ★


JUMUA KUTHBA

HADHRAT KHALIFATUL MASIH V

AT BAITUL FUTUH MOSQUE, LONDON

ON 21.05.2010

Translated by : Muallim M. NIZAMUDEEN

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET,
MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456